ஏழாவது

# நெடுநல்வாடை.

வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇப்
பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென
வார்கலி முனைஇய கொடுங்கோற் கோவல
ரேறுடை யினநிரை வேறுபுலம் பரப்பிப்
புலம்பெயர்*புலம்பொடு கலங்கிக் கோட
னீடிதழ்க் கண்ணி நீரலைக் கலாவ
மெய்க்கொள் பெரும்பனி நலியப் பலருடன்
கைக்கொள் கொள்ளியர் கவுள்புடையூஉ நடுங்க
மாமேயன் மறப்ப மந்தி கூரப்
பறவை படிவன வீழக் கறவை
கன்றுகோ ளொழியக் கடிய வீசிக்
குன்றுகுளிர்ப் பன்ன கூதிர்ப் பானாட்
புன்கொடி முசுண்டைப் பொறிப்புற வான்பூப்
பொன்போற் பீரமொடு புதற்புதன் மலரப்
பைங்காற் கொக்கின் மென்பறைத் தொழுதி
யிருங்களி பரந்த வீர வெண்மணற்
செவ்வரி நாரையோ டெவ்வாயுங் கவரக்
கயலற லெதிரக் கடும்புனற் சாஅய்ப்
†பெயலுலந் தெழுந்த பொங்கல் வெண்மழை
யகலிரு விசும்பிற் றுவலை கற்ப
வங்க ணகல்வய லார்பெயற் கலித்த
வண்டோட்டு நெல்லின் வருங்கதிர் வணங்க
முழுமுதற் கமுகின் மணியுற ழெருத்திற்
கொழுமட லவிழ்ந்த குழூஉக்கொள் பெருங்குலை
நுண்ணீர் தெவிள வீங்கிப் புடைதிரண்டு
தெண்ணீர்ப் பசுங்காய் சேறுகொள முற்ற
நளிகொள் சிமைய விரவுமலர் வியன்காக்
குளிர்கொள் சினைய குரூஉத்துளி தூங்க
மாட மோங்கிய மல்லன் மூதூ

---

* புலம்பினென்றும் பாடம்.
† பெயலுழந்தென்றும் பாடம்.

ராறுகிடந் தன்ன வகனெடுந் தெருவிற்
படலைக் கண்ணிப் பரேரெறுழ்த் திணிதோண்
முடலை யாக்கை முழுவலி மாக்கள்
வண்டுமூசு தேறன் மாந்தி மகிழ்சிறந்து
துவலைத் தண்டுளி பேணார் பகலிறந்
திருகோட் டறுவையர் வேண்டுவயிற் றிரிதர
வெள்ளி வள்ளி வீங்கிறைப் பணைத்தோண்
மெத்தென் சாயன் முத்துறழ் முறுவற்
பூங்குழைக் கமர்ந்த வேந்தெழின் மழைக்கண்
மடவரன் மகளிர் பிடகைப் பெய்த
செவ்வி யரும்பின் பைங்காற் பித்திகத்
தவ்வித ழவிழ்பதங் கமழப் பொழுதறிந்
திரும்புசெய் விளக்கி னீர்ந்திரிக் கொளீஇ
நெல்லு மலருந் தூஉய்க்கை தொழுது
மல்ல லாவண மாலை யயர
மனையுறை புறவின் செங்காற் சேவ
லின்புறு பெடையொடு மன்றுதேர்ந் *துண்ணா
திரவும் பகலு மயங்கிக் கையற்று
மதலைப் பள்ளி மாறுவன விருப்பக்
கடியுடை வியனகர்ச் சிறுகுறுந் தொழுவர்
கொள்ளுறழ் நறுங்கற் பலகூட்டு மறுக
வடவர் தந்த வான்கேழ் வட்டந்
தென்புல மருங்கிற் சாந்தொடு துறப்பக்
கூந்தன் மகளிர் கோதை புனையார்
பல்லிருங் கூந்தற் சின்மலர் பெய்ம்மார்
தண்ணறுந் தகர முளரி நெருப்பமைத்
திருங்கா ழகிலொடு வெள்ளயிர் புகைப்பக்
கைவல் கம்மியன் கவின்பெறப் புனைந்த
செங்கேழ் வட்டஞ் சுருக்கிக் கொடுந்தறிச்
சிலம்பி வானூல் வலந்தன தூங்க
வானுற நிவந்த மேனிலை மருங்கின்
வேனிற் பள்ளித் தென்வளி தரூஉம்
நேர்வாய்க் கட்டளை திரியாது திண்ணிலைப்
போர்வாய்க் கதவந் தாழொடு துறப்பக்
கல்லென் றுவலை தூவலின் யாவருந்
தொகுவாய்க் கன்னற் றண்ணீ ருண்ணார்
பகுவாய்த் தடவிற் செந்நெருப் பார

வாடன் மகளிர் பாடல்கொளப் புணர்மார்
*தண்மையிற் றிரிந்த வின்குரற் றீந்தொடை
கொம்மை வருமுலை வெம்மையிற் றடைஇக்
கருங்கோட்டுச் சீறியாழ் பண்ணுமுறை நிறுப்பக்
காதலர்ப் பிரிந்தோர் புலம்பப் பெயல்கனைந்து
கூதிர்நின் றன்றாற் போதே மாதிரம்
விரிகதிர் பரப்பிய வியல்வாய் மண்டில
மிருகோற் குறிநிலை வழுக்காது குடக்கேர்
பொருதிறஞ் சாரா வரைநா ளமயத்து
நூலறி புலவர் நுண்ணிதிற் கயிறிட்டுத்
தேஎங் கொண்டு தெய்வ நோக்கிப்
பெரும்பெயர் மன்னர்க் கொப்ப மனைவகுத்
தொருங்குடன் வளைஇ யோங்குநிலை வரைப்பிற்
பருவிரும்பு பிணித்துச் செவ்வரக் குரீஇத்
துணைமாண் கதவம் பொருத்தி யிணைமாண்டு
நாளொடும் பெயரிய கோளமை விழுமரத்துப்
போதவிழ் குவளைப் புதுப்பிடி காலமைத்துத்
தாழொடு குயின்ற போரமை புணர்ப்பிற்
கைவல் கம்மியன் முடுக்கலிற் புரைதீர்ந்
தையவி யப்பிய நெய்யணி நெடுநிலை
வென்றெழு கொடியொடு வேழஞ் சென்றுபுகக்
குன்றுகுயின் றன்ன வோங்குநிலை வாயிற்
றிருநிலை பெற்ற தீதுதீர் சிறப்பிற்
றருமணன் ஞெமிரிய திருநகர் முற்றத்து
நெடுமயி ரெகினத் தூநிற வேற்றை
குறுங்கா லன்னமோ டுகளு முன்கடைப்
பணைநிலை முனைஇய பல்லுளைப் புரவி
புல்லுணாத் தெவிட்டும் புலம்புவிடு குரலொடு
நிலவுப்பயன் கொள்ளு நெடுவெண் முற்றத்துக்
கிம்புரிப் பகுவா யம்பண நிறையக்
கலுழ்ந்துவீ ழருவிப் பாடுவிறந் தயல
வொலிநெடும் பீலி யொல்க மெல்லியற்
†கலிமயி லகவும் வயிர்மரு ளின்னிசை
நளிமலைச் சிலம்பிற் சிலம்புங் கோயில்
யவன ரியற்றிய வினைமாண் பாவை

---

* தன்மையிற் றிரிந்தவென்றும் பாடம்.
† களிமயிலென்றும் பாடம்.

கையேந் தையக னிறையநெய் சொரிந்து
பருஉத்திரி கொளீஇய குரூஉத்தலை நிமிரெரி
யறுவறு காலைதோ றமைவரப் பண்ணிப்
பல்வேறு பள்ளிதொறும் பாயிரு ணீங்கப்
பீடுகெழு சிறப்பிற் பெருந்தகை யல்ல
தாடவர் குறுகா வருங்கடி வரைப்பின்
வரைகண் டன்ன தோன்றல வரைசேர்பு
விற்கிடந் தன்ன கொடிய பலவயின்
வெள்ளி யன்ன விளங்குஞ் சுதையுரீஇ
மணிகண் டன்ன மாத்திரட் டிண்காழ்ச்
செம்பியன் றன்ன செய்வுறு நெடுஞ்சுவ
ருருவப் பல்பூ வொருகொடி வளைஇக்
கருவொடு பெயரிய காண்பி னல்லிற்
றசநான் கெய்திய பணைமரு ணோன்றா
ளிகன்மீக் கூறு மேந்தெழில் வரிநுதற்
பொருதொழி நாக மொழியெயி றருகெறிந்து
சீருஞ் செம்மையு மொப்ப வல்லோன்
கூருளி குயின்ற வீரிலை யிடையிடுபு
தூங்கியன் மகளிர் வீங்குமுலை கடுப்பப்
புடைதிரண் டிருந்த குடத்த விடைதிரண்
டுள்ளி நோன்முதல் பொருத்தி யடியமைத்துப்
பேரள வெய்திய பெரும்பெயர்ப் பாண்டின்
மடைமா ணுண்ணிழை பொலியத் தொடைமாண்டு
முத்துடைச் சாலேக நாற்றிக் குத்துறுத்துப்
புலிப்பொறிக் கொண்ட பூங்கேழ்த் தட்டத்துத்
தகடுகண் புதையக் கொளீஇத் துகடீர்ந்
தூட்டுறு பன்மயிர் விரைஇ வயமான்
வேட்டம் பொறித்து வியன்கட் கானத்து
முல்லைப் பல்போ துறழப் பூநிரைத்து
மெல்லிதின் விரிந்த சேக்கை மேம்படத்
துணைபுண ரன்னத் தூநிறத் தூவி
யிணையணை மேம்படப் பாயணை யிட்டுக்
காடி கொண்ட கழுவுறு கலிங்கத்துத்
தோடமை தூமடி விரித்த சேக்கை
யாரந் தாங்கிய வலர்முலை யாகத்துப்
பின்னமை நெடுவீழ் தாழத் துணைதுறந்து
நன்னுத லுலறிய சின்மெல் லோதி

நெடுநீர் வார்குழை களைந்தெனக் குறுங்கண்
*வாயுறை யழுத்திய வறிதுவீழ் காதிற்
பொலந்தொடி தின்ற மயிர்வார் முன்கை
வலம்புரி வளையொடு கடிகைநூல் யாத்து
வாளைப் பகுவாய் கடுப்ப வணக்குறுத்துச்
செவ்விரற் கொளீஇய செங்கேழ் விளக்கத்துப்
பூந்துகின் மரீஇய வேந்துகோட் டல்கு
லம்மா சூர்ந்த வவிர்நூற் கலிங்கமொடு
புனையா வோவியங் கடுப்பப் புனைவி
றளிரேர் மேனித் தாய சுணங்கி
னம்பணைத் தடைஇய மென்றோண் முகிழ்முலை
வம்புவிசித் தியாத்த வாங்குசாய் நுசுப்பின்
மெல்லியன் மகளிர் நல்லடி வருட
நரைவிரா வுற்ற நறுமென் கூந்தற்
செம்முகச் செவிலியர் கைம்மிகக் குழீஇக்
குறியவு நெடியவு முரைபல பயிற்றி
யின்னே வருகுவ ரின்றுணை யோரென
முகத்தகை மொழியவு மொல்லாள் மிகக்கலுழ்ந்து
நுண்சேறு வழித்த நோனிலைத் திரள்கா
லூறா வறுமுலை கொளீஇய காழிருத்திப்
புதுவ தியன்ற மெழுகுசெய் படமிசைத்
திண்ணிலை மருப்பி னாடுதலை யாக
விண்ணூர்பு திரிதரும் வீங்குசெலன் மண்டிலத்து
முரண்மிகு சிறப்பிற் செல்வனொடு நிலைஇய
வுரோகிணி நினைவன ணோக்கி நெடிதுயிரா
மாயித ழேந்திய மலிந்துவீ ழரிப்பனி
செவ்விரல் கடைக்கண் சேர்த்திச் சிலதெறியாப்
புலம்பொடு வதியு நலங்கிள ரரிவைக்
கின்னா வரும்படர் தீர விறறந்
தின்னே முடிகதில் லம்ம மின்னவி
ரோடையொடு பொலிந்த வினைநவில் யானை
நீடிரு டடக்கை நிலமிசைப் புரளக்
களிறுகளம் படுத்த பெருஞ்செய் யாடவ
ரொளிறுவாள் விழுப்புண் காணிய புறம்போந்து
வடந்தைத் தண்வளி யெறிதொறு நுடங்கித்
தெற்கேர் பிறைஞ்சிய தலைய நற்பல்

* வாயறையென்றும் பாடம்.

பாண்டில் விளக்கிற் பரூஉச்சுட ரழல
வேம்புதலை யாத்த நோன்கா ழெஃகமொடு
முன்னோன் முறைமுறை காட்டப் பின்னர்
மணிபுறத் திட்ட மாத்தாட் பிடியொடு
பருமங் களையாப் பாய்பரிக் கலிமா
விருஞ்சேற் றுத் தெருவி னெறிதுளி விதிர்ப்பப்
புடைவீ ழந்துகி லிடவயிற் றழீஇ
வாடோட் கோத்த வன்கட் காளை
சுவன்மிசை யமைத்த கையன் முகனமர்ந்து
நூல்கால் யாத்த மாலை வெண்குடைத்
தவ்வென் றசைஇத்*தாதுளி மறைப்ப
நள்ளென் யாமத்துப் பள்ளி கொள்ளான்
சிலரொடு திரிதரும் வேந்தன்
பலரொடு முரணிய பாசறைத் தொழிலே.

## இதன்பொருள்.

இப்பாட்டிற்கு நெடுநல்வாடையென்று பெயர் கூறினர். இப்பெயர் நெடிதாகிய வாடையெனவிரிதலிற் பண்புத்தொகையாயிற்று. வாடையென வாடைக்காற்றிற் றோன்றின கூதிர்ப்பாசறையை யுணர்த்தலிற் பிறந்தவழிக்கூறலென்னும் ஆகுபெயராய்நின்றது. இப்பாட்டினுட் "கூதிர்நின் றன்றாற் போதே" (எஉ) யெனவும், "கூதிர்ப் பாணள்" (கஉ) எனவுங் கூறுகின்றாராதலின், இது † "வாகை தானே பாலையது புறனே" எனப் பாலைக்குப்புறனாகக்கூறிய வாகைத்திணையாய் அதனுள், ‡ "கூதிர் வேனி லென்றிரு பாசறைக், காதலி னொன்றிக் கண்ணிய மரபினும்" எனக்கூறிய கூதிர்ப்பாசறையேயாயிற்று. தலைவனைப் பிரிந்திருந்து வருந்துந்தலைவிக்கு ஒருபொழுது ஓரூழிபோல நெடிதாகியவாடையாய்ப் பாலையாகிய உரிப்பொருளுணர்த்திற்று. அகத்தொடங்கிப் போகம்நுகர்வார்க்குச் சிறந்தகாலமாயினும் அரசன் போகம்வேண்டிப் பொதுச்சொற்பொருளைய் அப் போகத்தின்மனமற்று வேற்றுப்புலத்துப்போந்திருக்கின்ற இருப்பாகலின், அவற்கு நல்லதாகிய வாடையாயிற்று. எனவே காமத்திடத்து வெற்றியெய்தலின் வாகைத்திணையாயிற்று. இப்பாட்டுச்சுட்டி ஒருவர்பெயர்கொள்ளாமையின் அகப்பொருளாமேனும் "வேம்புதலை யாத்த நோன்கா ழெஃகம்" (களசு) என அடையாளப்பூக்கூறினமையின், அகமாகாதாயிற்று.

[வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇப், பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென:] பொய்யா வானம் வையகம் பனிப்ப வலன் வளைஇ ஏர்பு புதுப் பெயல் பொழிந்தென—பருவம்பொய்யாதமேகம் உலகெல்லாங்குளிரும்படியாகத் தான்கிடந்தமலையை வலமாகவளைந்து எழுந்திருந்து கார்காலத்து மழையைப்பெய்ததாக,

ஆர்கலி முனைஇய கொடுங்கோற் கோவலர்—வெள்ளத்தைவெறுத்த கொடிய கோலினையுடைய இடையர்,

* பரம்புதுளி மறைப்பவென்றும் பாடம்.
† தொல்காப்பியம், பொருளதிகாரம், புறத்திணையியல், கஅ.
‡ ,, ,, ,, உக.

ஏறுடை இனம் நிரை வேறு புலம் பரப்பி—ஏற்றையுடைய இனங்களையும் பசுக்களையும் மேட்டுநிலமாகிய முல்லைநிலத்தே மேயவிட்டு,

எருமையையும் ஆட்டையும் இனமென்றார்.

புலம் பெயர் புலம்பொடு கலங்கி—தாம் பயின்ற நிலத்தைக் கைவிட்டுப்போம் தனிமையினாலே வருத்தமெய்தி,

ஊர்க்கு அண்ணியவிடத்தேமேய்த்து ஊரிற்றங்காமையிற் புலம்பெயர் புலம்பென்றார்.

கோடல் நீடு இதழ்க்கண்ணி நீர் அலைக் கலாவ—காந்தளினது நீண்ட இதழ்களாற்கட்டினகண்ணி நீரலைத்தலிலே கலக்கமெய்த,

மெய்க் கொள் பெரும் பனி நலியப் பலருடன் கைக் கொள் கொள்ளியர் கவுள் புடையூஉ நடுங்க—தம்முடம்பிடத்தேகொண்ட பெரியகுளிர்ச்சி வருத்துகையினாலே பலருங்கூடிக் கையிடத்திலேகொண்ட நெருப்பினையுடையராய்ப் பற்பறைகொட்டி நடுங்க,

கையை நெருப்பிலேகாய்த்தி அதிற்கொண்டவெம்மையைக் கவுளிலேயடுத்தலிற் கைக்கொள்கொள்ளியரென்றார்.

கோவலர் (௫) பலருடன் (எ) பரப்பிக் (௬) கலங்கிக் (௯) கலாவக் (௬) கொள்ளியராய்க் கவுள்புடையூஉ நடுங்க (அ) வென்க.

மா மேயல் மறப்ப—விலங்குகள் மேய்தற்றொழிலை மறந்தொடுங்க,

மந்தி கூர—குரங்கு குளிர்ச்சிமிக,

குன்றுக்கவென்பாருமுளர்.

[பறவை படிவன வீழ:] படிவன பறவை வீழ—மரங்களிலே தங்குவனவாகிய புள்ளுக்கள் காற்றுமிகுதியால் நிலத்தேவீழ,

[கறவை, கன்றுகோ ளொழியக் கடிய வீசி:] கறவை கடிய வீசிக் கன்று கோள் ஒழிய—பசுக்கள் குளிரின்மிகுதியாற் கடியவாய் உதைத்துக் கன்றை ஏற்றுக்கோடலைத் தவிர,

குன்று குளிர்ப்பன்ன கூதிர்ப் பானாள்—மலையைக் குளிர்ச்சிசெய்யுமாறு போன்ற கூதிர்க்காலத்து நடுயாமத்தே புலம்பொடுவதியுமரிவைக்கு (௧௬௬) என மேலே கூட்டுக.

புன் கொடி முசுண்டைப் பொறிப் புற வான் பூ பொன் போற் பீரமொடு புதற்புதல் மலர—புல்லிய கொடியினையுடைய முசுட்டையிற் றிரண்ட புறத்தையுடைய வெள்ளிய பூப் பொன்போன்ற நிறத்தையுடைய பீர்க்குடனே சிறுதூறுகடோறும் விரிய,

[பைங்காற் கொக்கின் மென்பறைத் தொழுதி, யிருங்களி பரந்த வீர வெண்மணற், செவ்வரி நாரையோ டெவ்வாயுங் கவரக், கயலற லெதிரக் கடும்புனற் சாஅய்ப், பெயலுலந் தெழுந்த:]

கடும் புனல் சாஅய்க் கயல் அறல் எதிர—கடிதாயோடினநீரினின்றும் ஒரு கால் பற்றிக் கயல்கள் அற்றநீர்க்கு எதிரேவருகையினாலே,

பெயல் உலந்து எழுந்த பைங்காற் கொக்கின் மென்பறைத் தொழுதி—மழையாலேவருந்தி அதுசிறிதுவிட்டவளவிலே எழுந்த பசியகாலையுடைய கொக்கினது மெல்லிய சிறகையுடைய திரள்,

செவ்வரி நாரையோடு இருங் களி பரந்த ஈர வெண்மணல் எவ்வாயும் கவர—சிவந்த வரியினையுடைய நாரைகளோடே கரியவண்டலிட்ட சேறுபரந்த ஈரத்தினையுடைய வெள்ளிய மணலாகிய எவ்விடங்களினுமிருந்து அக்கயலைத்தின்ன,

பொங்கல் வெண்மழை அகல் இரு விசும்பில் துவலை கற்ப—பொங்குதலையுடைய வெள்ளியமேகம் அகன்ற பெரியஆகாயத்தே சிறுதுவலையாகத்தூவ மேற்கற்கும்படியாகக் கூதிர் ஈண்டுகின்றது (எஉ) எனமேலேகூட்டுக.

கற்பவென்னுஞ் செயவெனெச்சம் ஈண்டு எதிர்காலமுணர்த்திற்று.

கற்பவென்றார், மிகப்பெய்தலே தனக்கியல்பென்பது தோன்ற.

அங்கண் அகல் வயல் ஆர் பெயற் கலித்த வண்டோட்டு நெல்லின் வருங் கதிர் வணங்க—அழகியஇடத்தையுடைய அகன்ற வயனிறைந்தநீராலே மிக்கெழுந்த வளவிய இலையினையுடைய நெல்லினின்றும் புறப்பட்ட கதிர் முற்றிவளைய,

புல்லாதலிற் றோடென்றார்.

முழுமுதற் கமுகின் மணி உறழ் எருத்திற் கொழு மடல் அவிழ்ந்த குழூஉக்கொள் பெருங்குலை—பெரியஅடியினையுடைய கமுகினது நீலமணியையொத்த கழுத்திற் கொழுவிய மடலிடத்துப் பாளைவிரிந்த திரட்சியைக்கொண்ட தாறுகளில்,

[நுண்ணீர் தெவிள வீங்கிப் புடைதிரண்டு, தெண்ணீர்ப பசுங்காய் சேறுகொள முற்ற:] தெண்ணீர்ப் பசுங்காய் நுண்ணீர் தெவிள வீங்கிப் புடைதிரண்டு சேறுகொள முற்ற—தெளிந்தநீரை உள்ளேயுடைய பசியகாய் நுண்ணிய நீர்தான்றிரளும்படியாகவீங்கிப் பக்கந்திரண்டு இனிமைகொள்ளும்படி முற்ற,

[நளிகொள் சிமைய விரவுமலர் வியன்கா:] விரவு மலர் நளி கொள் சிமைய வியன்கா—முன்புவிரவினபூக்கள்செறிதலைத் தன்னிடத்தேகொண்ட உச்சியினையுடையவாகிய அகன்றபொழில்கள்,

குளிர் கொள் சினைய குரூஉத் துளி தூங்க—குளிர்ச்சியைத் தம்மிடத்தேகொண்ட கொம்புகளையுடையவாகி அவற்றிலேற்றுநின்ற நிறத்தையுடைய மழைத்துளி மாறாமல்வீழ,

மாடம் ஓங்கிய மல்லல் மூதூர் ஆறு கிடந்தன்ன அகல் நெடுந் தெருவில்—மாடங்களுயர்ந்த வளப்பத்தையுடைய பழையவூரில் யாறுகிடந்தாற்போன்ற அகன்ற நெடியதெருவிலே திரிதர (௩௫) வென்க.

படலைக் கண்ணிப் பரேர் எறுழ்த் திணி தோள் முடலை யாக்கை முழுவலி மாக்கள்—தழைவிரவின மாலையினையும் பருத்த அழகினையுடையவாகிய வலியினையுடைய இறுகினதோளினையும் முறுக்குண்ட உடம்பினையும் நிரம்பின மெய்வலியினையுமுடைய மிலேச்சர்,

வண்டு மூசு தேறல் மாந்தி மகிழ்சிறந்து—வண்டுகள்மொய்க்கும் கள்ளையுண்டு மகிழ்ச்சிமிக்கு,

[துவலைத் தண்டுளி பேணார் பகலிறந், திருகோட் டறுவையர் வேண்டுவயிற் றிரிதர:]

துவலைத் தண் துளி பேணார் இரு கோட்டு அறுவையர் வேண்டுவயின் திரிதர—சிறுதுவலையாகிய தண்ணிய துளியை அஞ்சாராய் முன்னும்பின்னுந் தொங்கலாக நாலவிட்ட துகிலினையுடையராய்த் தமக்கு வேண்டினவிடத்தே திரிதலைச்செய்ய,

பகலிறந்தென்பதனை மேலேகூட்டுக.

[வெள்ளி வள்ளி வீங்கிறைப் பணைத்தோண், மெத்தென்:] வெள்ளி வள்ளி வீங்கு இறை மெத்தென் பணைத் தோள்— வெளுக்கப்பட்டதாகிய சங்குவளையிறுகின இறையினையுடைய மெத்தென்ற பணைபோலுந் தோளினையும்,

மெத்தென் சாயல்— மெய்ம்முழுதும் கட்புலனாய்த்தோன்றுகின்ற மெத்தென்ற சாயலினையும்,

முத்து உறழ் முறுவல்—முத்தையொத்த பல்லினையும்,

பூங் குழைக்கு அமர்ந்த ஏந்து எழில் மழைக் கண்—பொலிவினையுடைய மகரக்குழையிட்டஅழகிற்குப் பொருந்தின உயர்ந்துதோன்றுகின்ற அழகினையுடைய குளிர்ச்சியையுடைய கண்ணினையும்,

இனி உருபுமயக்கமாக்கிக் குழையிடத்தேசென்றமர்ந்த கண்ணென்றுமுரைப்ப.

மடவரன் மகளிர்—உயர்ந்துதோன்றுகின்ற மடப்பத்தினையுடையமகளிர்,

தோள்முதலியவற்றையுடைய மகளிரென்க.

[பிடகைப் பெய்த, செவ்வி யரும்பின் பைங்காற் பித்திகத், தவ்வித ழவிழ்பதங் கமழ:] பிடகைப் பெய்த பைங்காற் பித்திகத்துச் செவ்வி அரும்பின் அவ்விதழ் பகலிறந்து (௩௪) அவிழ் பதம் கமழ—பூந்தட்டிலேயிட்டுவைத்த பசிய காலினையுடைய பிச்சியினுடைய அலருஞ்செவ்வியையுடைய அரும்பினது அழகியவிதழ்கள் பகற்பொழுதைக்கடந்துவிரியுஞ்செவ்வி மணக்கையினாலே,

செவ்வரியரும்பு பாட்டமாயிற் சிவந்த வரியினையுடைய அரும்பென்க.

பொழுது அறிந்து—அந்திக்காலமென்றறிந்து,

என்றதனாற் கூதிரால் இரவும்பகலுந் தெரியாவென்றார்.

இரும்பு செய் விளக்கின் ஈர்ந்திரிக் கொளீஇ—இரும்பாற்செய்த தகளியிலே நெய்தோய்ந்த திரியைக்கொளுத்தி,

விளக்கு - ஆகுபெயர்.

நெல்லும் மலரும் தூஉய்க் கைதொழுது—நெல்லையுமலரையுஞ்சிதறி இல்லுறைதெய்வத்தைவணங்கி,

மல்லல் ஆவணம் மாலை அயர—வளப்பத்தையுடைய அங்காடித்தெருவெல்லாம் மாலைக்காலத்தைக் கொண்டாட,

மகளிர் (௩௯)கமழுகையினாலே பொழுதறிந்து (௪௧) திரிக்கொளீஇத்(௪௨) தூவித்தொழுது (௪௩) அயரவென்க.

[மனையுறை புறவின் செங்காற் சேவ, லின்புறு பெடையொடு மன்றுதேர்ந் துண்ணா, திரவும் பகலு மயங்கிக் கையற்று, மதலைப் பள்ளி மாறுவன விருப்ப:]

இரவும் பகலும் மயங்கி—இராக்காலமும் பகற்காலமுந் தெரியாமல் மயங்குகையினாலே,

மனை உறை புறவின் செங்காற் சேவல் இன்புறு பெடையொடு மன்று தேர்ந்து உண்ணாது — மனையின்கண்ணேயிருக்கும் பேட்டினையுடைய சிவந்தகாலினையுடைய சேவல் தான் இன்பநுகரும் பெடையோடு மன்றிலேசென்று இரைதேடியுண்ணமல்;

கை அற்று மதலைப் பள்ளி மாறுவன இருப்ப—செயலற்றுக் கொடுங்கையைத் தாங்குதலுடைய பலகைகளிலே பறவாதிருந்து கடுத்தகால் ஆறும்படி மாறிமாறி இருக்க,

இனித் தலை மாறியிருப்பவென்பாருமுளர். மதலைப்பள்ளி - கபோதகத்தலை. இறையுறைபுறவும் பாடம்.

கடி உடை வியன் நகர்ச் சிறு குறுந்தொழுவர் கொள் உறழ் நறுங்கற் பல கூட்டு மறுக—காவலையுடைய அகன்ற மனைகளில் சிறியராகிய குற்றேவல் வினைஞர் கருங்கொள்ளினிறத்தையொத்த நறிய சாத்தம்மியிலே கத்தூரிமுதலிய பசுங்கூட்டரைக்க,

வடவர் தந்த வான் கேழ் வட்டம் தென்புலம் மருங்கிற் சாந்தொடு துறப்ப—வடநாட்டிலுள்ளார் கொண்டுவந்த வெள்ளியநிறத்தையுடைய சிலாவட்டம் தென்றிசையிடத்திற் சந்தனத்தோடே பயன்படாமற்கிடப்ப,

[கூந்தல் மகளிர் கோதை புனையார்:] மகளிர் கூந்தல் கோதை புனையார்—மகளிர் குளிர்ச்சிமிகுதியால் தம்மயிரிடத்து மாலையிட்டு முடியாராய்,

பல் இருங் கூந்தற் சின்மலர் பெய்மார்—தம் பலவாகிய கரிய மயிரிடத்தே மங்கலமாகச் சிலமலரிட்டு முடித்தலைவேண்டி,

தண் நறும் தகரம் முளரி நெருப்பு அமைத்து இருங்காழ் அகிலொடு வெள் அயிர் புகைப்ப—தண்ணிய நறிய மயிர்ச்சந்தனமாகிய விறகிலே நெருப்பையுண்டாக்கி அதிலே கரிதாகிய வயிரத்தையுடைய அகிலோடே வெள்ளிய * கண்டசருக்கரையையுங் கூட்டிப் புகைப்ப,

கை வல் கம்மியன் கவின் பெறப் புனைந்த செங்கேழ் வட்டம் சுருக்கி—கையாற்புனைதல்வல்ல உருக்குத்தொழிலினுடைய அழகுபெறப்பண்ணின சிவந்தநிறத்தையுடைய ஆலவட்டம் உறையிடப்பட்டு,

[கொடுந்தறிச், சிலம்பி வானூல் வலந்தன தூங்க:] சிலம்பி வால் நூல் வலந்தன கொடுந்தறி தூங்க—சிலந்தியினது வெள்ளிய நூலாற் சூழப்பட்டனவாய் வளைந்த முளைக்கோலிலேதூங்க,

வான் உற நிவந்த மேல் நிலை மருங்கின்—தேவருறைதற்கேற்பவுயர்ந்த மேலாநிலத்திடத்து,

வேனிற் பள்ளித் தென்வளி தரூஉம் நேர் வாய்க் கட்டளை திரியாது—இளவேனிற்காலத்துத் துயிலும் படுக்கைக்குத் தென்றற்காற்றைத்தரும் சாலேகத்திலேநின்று உலாவாதே,

நேர்வாய்க்கட்டளையென்றது மாடத்தின்கட்சாலேகத்தை. கட்டளைதெரியாதென்றுபாடமாயின், திறவாதென்க.

திண் நிலைப் போர் வாய் கதவம் தாழொடு துறப்ப—சிக்கென்றநிலையினையுடைய இரண்டுகதவும் தம்முட்பொருதல்வாய்த்தகதவு தாழிட்டுக்கிடக்க,

கல்லென் துவலை தூவலின் யாவரும் தொகு வாய்க் கன்னல் தண்ணீர் உண்ணார் பகு வாய்த் தடவிற் செந்நெருப்பு ஆர—கல்லென்கின்ற ஓசையினையுடைய சிறுதுவலையை வாடைக்காற்று எங்கும் பரப்புகையினாலே இளையோரும் முதியோரும்

---

* கண்டசருக்கரையெனவும் பிரதிபேதமுண்டு.

குவிந்தவாயையுடைய கரகத்திற்றண்ணீரைக் குடியாராய்ப் பகுத்தாற்போன்ற வாயையுடைய இந்தளத்திலிட்ட சிவந்த நெருப்பின்வெம்மையை நுகர,

ஆடல் மகளிர் பாடல் கொளப் புணர்மார்—ஆடற்றொழிலையுடைய மகளிர் தாம்பாடுகின்றபாட்டினை யாழ் தன்னிடத்தேகொள்ளும்படி நரம்பைக்கூட்டுதற்கு,

தண்மையின் திரிந்த இன்குரல் தீந்தொடை கொம்மை வருமுலை வெம்மையில் தடைஇ—குளிர்ச்சியாலே தன்னிலைகுலைந்த இனியகுரலாகிய நரம்பைப் பெரிய எழுகின்ற முலையின்வெப்பத்தே தடவி,

தீந்தொடை - ஆகுபெயர்.

கருங்கோட்டுச் சீறியாழ் பண்ணு முறை நிறுப்ப—கரியதண்டினையுடைய சிறியயாழைப் பண்ணை நிற்குமுறையிலே நிறுத்த,

காதலர்ப் பிரிந்தோர் புலம்ப—கணவரைப்பிரிந்தமகளிர் வருந்த,

பெயல் கனைந்து கூதிர் நின்றன்றால்—காலமழைசெறிந்து கூதிர்க்காலமாய்நிலைபெற்றது; அவ்விடத்து,

போது—பின்னர் நிகழ்ந்தபொழுது,

வானம் கார்காலத்து மழையைப் பெய்ததாகப் (உ) பின்னர் நிகழ்ந்தபொழுது (எஉ) கோவலர் (௩) நடுங்க (அ)மறப்பக் கூர (௧) வீழ (௧0) ஒழிய (௧௧) மலரக் (௧௨) கவரக் (௧எ) கற்ப (உ0) வணங்க (உ௪) முற்றத் (உ௬) தூங்கத் (உஅ) திரிதர (௩௫) அயர (௪௪) இருப்ப (௪அ) மறுகத் (௫0) துறப்பப் (௫உ) புகைப்பத் (௫௬) தூங்கத் (௫௧) துறப்ப (௬௩) ஆர (௬௬) நிறுப்பப் (எ0) புலம்பப் பெயல்செறிந்து (எ௧) கூதிர்க்காலமாய்நிலைபெற்றது; அவ்விடத்தெனமுடிக்க.

[மாதிரம், விரிகதிர் பரப்பிய வியல்வாய் மண்டிலம், இருகோற் குறிநிலை வழுக்காது குடக்கேர், பொருதிறஞ் சாரா வரைநா ளமயத்து:]

மாதிரம் விரி கதிர் பரப்பிய வியல் வாய் மண்டிலம் குடக்கு ஏர்பு—திசைகளிலே விரிந்தகிரணங்களைப்பரப்பின அகன்ற இடத்தையுடையஞாயிறு மேற்றிசைக்கட்சேறற்கெழுந்து,

இருகோற் குறிநிலை வழுக்காது ஒருதிறம் சாரா அமயத்து அரைநாள்—இரண்டிடத்துநாட்டின இரண்டுகோலிடத்துஞ் சாயாநிழலால் தாரைபோகவோடுகின்றநிலையைக் குறித்துக்கொள்ளுந்தன்மை தப்பாதபடி தான் ஒருபக்கத்தைச்சாரப்போகாத சித்திரைத்திங்களின் நடுவிற்பத்தினின்ற யாதோர்நாளிற் பதினைந்தாநாழிகையிலே அங்குரார்ப்பணம்பண்ணி,

நூல் அறி புலவர் நுண்ணிதிற் கயிறு இட்டு—சிற்பநூலையறிந்ததச்சர் கூரிதாக நூலை நேரேபிடித்து,

தேஎம் கொண்டு தெய்வம் நோக்கி — திசைகளைக்குறித்துக்கொண்டு அத்திசைகளில் நிற்குந் தெய்வங்களையும் குறைவறப்பார்த்து,

[பெரும்பெயர் மன்னர்க் கொப்ப மனைவகுத்து, ஒருங்கு:] பெரும்பெயர் மன்னர்க்கு ஒப்ப ஒருங்கு மனை வகுத்து—பெரிய பெயரினையுடைய அரசர்க்கொப்ப மனைகளையும் வாயில்களையும் மண்டபங்கள் முதலியவற்றையுங் கூறுபடுத்தி,

உடன் வளைஇ ஓங்கு நிலைவரைப்பில் — இவ்விடங்களையெல்லாம் சேரவளைத்து உயர்ந்த மதிலின்வாயி (அஅ) லென்க.

பரு இரும்பு பிணித்து—ஆணிகளும் பட்டங்களுமாகிய பரிய இரும்பாலேகட்டி,

செவ்வரக்கு உரீஇ—சாதிலிங்கம்வழித்து,

[துணைமாண் கதவம் பொருத்தி யிணைமாண்டு, நாளொடும் பெயரிய கோளமை விழுமரத்துப், போதவிழ் குவளைப் புதுப்பிடி காலமைத்துத், தாழொடு குயின்ற போரமை புணர்ப்பிற், கைவல் கம்மியன் முடுக்கலிற் புரைதீர்ந்து:]

தாழொடு குயின்ற துணை மாண் கதவம் பொருத்தி—தாழோடே சேரப்பண்ணின இரண்டாய் மாட்சிமைப்பட்ட கதவைச்சேர்த்தி,

இணை மாண்டு புதுப் போது அவிழ் குவளைப் பிடி கால் அமைத்து—இணைதல் மாட்சிமைப்பட்டுப் புதியபோதாயவிழ்ந்த குவளைப்பூவோடே பிடிகளையும் தன்னிடத்தேபண்ணி,

என்றது - நடுவேதிருவும் இரண்டுபுறத்தும் இரண்டுசெங்கழுநீர்ப்பூவும் இரண்டு பிடியுமாகவகுத்த உத்திரக்கற்கவி.

நாளொடும் பெயரிய விழுமரத்துக் கோள் அமை நெடுநிலை (அசு)—உத்திரமென்னும் நாளிற்பெயர்பெற்ற உத்திரக்கற்கவியிலே செருகுதல் பொருந்தின நெடுநிலையென்க.

அமைத்தென்னுமெச்சம் பெயாபெற்றவென்பதனோடுமுடிந்தது.

கை வல் கம்மியன் முடுக்கலிற் புரை தீர்ந்து போர் அமை புணர்ப்பின் நெடுநிலை (அசு)—கைத்தொழில்வல்லதச்சன் கடாவுகையினாலே வெளியற்றுப் பலமரங்களுந்தம்மிற்கிட்டுதலமைந்த கூட்டத்தினையுடைய நெடுநிலையென்க.

ஐயவி அப்பிய நெய் அணி நெடுநிலை—வெண்சிறுகடுகெப்பிவைத்த நெய்யணிந்த நெடியநிலையினையுடைய,

அதிற்றெய்வத்திற்கு வெண்சிறுகடுகும் நெய்யுமணிந்தது.

வென்று எழு கொடியொடு வேழம் சென்று புக—வென்றிகொண்டெழும் கொடிகளோடே யானைகள் சென்றுபுகுதும்படி யுயர்ந்த,

குன்று குயின்றன்ன ஓங்கு நிலை வாயில்—மலையை நடுவே வெளியாகத்திறந்தாற்போன்ற கோபுரவாயில்களையும்,

ஓங்கின நிலையையுடைய கோபுரத்தை ஓங்குநிலையென்றார்; ஆகுபெயர்.

வரைப்பின் (எக) வாயிலென்க.

கதவுபொருத்திக் கோளமைத்த புணர்ப்பினையுடைய நெடுநிலையினையுடைய வாயிலென்க.

[திருநிலை பெற்ற தீதுதீர் சிறப்பிற், றருமணன் ஞெமிரிய திருநகர் முற்றத்து, நெடுமயி ரெகினத் தூநிற வேற்றை, குறுங்கா லன்னமோ டுகளு முன்கடை:]

நெடுமயிர் எகினத் தூ நிற ஏற்றை குறுங்கால் அன்னமோடு உகளும் முன்கடை—நெடிய மயிரினையுடைய கவரிமாவில் தூயநிறத்தையுடைய ஏற்றை குறியகாலினையுடைய *அன்னத்தோடே தாவித்திரியும் வாசல்முன்பினையும்,

கடைமுன் - முன்கடையென மரூஉமுடிபு. அன்னமும் தாவிப்பறத்தலின், உகளுமென்று கவரிமாவோடே ஒருவினைகூறினார்.

* தரு மணல் ஞெமிரிய திரு நகர் முற்றத்து,

* இந்தப்பாகத்திற்கு உரைகிடைத்திலது; கொண்டுவந்திட்ட மணல் பரந்த அழகிய வீட்டின் முன்னிடத்தையுமென்க.

திரு நிலைபெற்ற தீது தீர் சிறப்பின்—திருமகள் நிலைபெற்ற குற்றமற்ற தலைமையினையும்,

வாயிலினையும் முன்கடையினையும் முற்றத்தினையும் சிறப்பினையுமுடைய கோயிலெனமுடிக்க.

பணை நிலை முனைஇய பல்லுளைப் புரவி புல் உணாத் தெவிட்டும் புலம்பு விடு குரலொடு—பந்தியிலேநிற்றலைவெறுத்த பலவாகிய கேசாரியையுடைய குதிரைகள் புல்லாகிய உணவைக் குதட்டும் தனிமைதோற்றுவிக்கின்ற குரலோடே,

நிலவுப் பயன் கொள்ளும் நெடு வெண் முற்றத்துக் கிம்புரிப் பகுவாய் அம்பணம் நிறையக் கலுழ்ந்து வீழ் அருவிப் பாடு விறந்து—நிலாவின்பயனை அரசனுகரும் நெடிய வெள்ளிய நிலாமுற்றத்திலுள்ள நீர்வந்துவீழும் மகரவாயாகப் பகுத்த வாயினையுடைய பந்தநிறைகையினாலே கலங்கிவிழுகின்ற அருவியினோசைசெறிந்து,

அயல ஒலி நெடும்பீலி ஒல்க மெல்லியற் கலி மயில் அகவும் வயிர் மருள் இன்இசை—அதற்கு அயலிடத்தனவாகிய தழைத்த நெடிய பீலியொதுங்க மெல்லிய இயல்பினையுடைய செருக்கினமயில் ஆரவாரிக்கும் கொம்பென்று மருளும் இனியவோசை,

நளி மலைச் சிலம்பிற் சிலம்பும் கோயில்—செறிந்தமலையில் ஆரவாரம்போல ஆரவாரிக்கும் கோயில்,

புலம்புவிடுகுரலோடே அருவிப்பாடும் வயிர்மருளின்னிசையும் விறந்து மலைச்சிலம்பிற் சிலம்புங்கோயிலெனமுடிக்க.

அருவியும் மயிலும் மலைக்கும் உள்ளனவாகலின், உவமைகொண்டார். புலம்புவிடுகுரல் மழை மெத்தெனமுழங்கினாற்போன்றிருத்தலின், உவமைகொண்டார். இனி அவற்றின் எதிரொலியெழுகின்ற கோயிலென்றுமாம்.

யவனர் இயற்றிய வினை மாண் பாவை கை ஏந்து ஐ அகல் நிறைய நெய் சொரிந்து—சோனகர்பண்ணின தொழில்மாட்சிமைப்பட்டபாவை தன்கையிலே ஏந்தியிருக்கின்ற வியப்பையுடைய தகளிநிறையும்படி நெய்வார்க்கப்பட்டு,

பரூஉத் திரி கொளீஇய குரூஉத் தலை நிமிர் எரி—பருந்திரிகளைப் பந்தங்களிலே கொளுத்திவைத்த நிறத்தையுடைத்தாகிய தலையினையுடைய மேனோக்கியெரிகின்ற விளக்கை,

அறுவறு காலைதோறு அமைவரப் பண்ணி—நெய்வற்றினகாலந்தோறும் ஒளிமழுங்கினகாலந்தோறும் நெய்வார்த்துத் தூண்டி,

பல் வேறு பள்ளிதொறும் பாயிருள் நீங்க—பலவாய்வேறுபட்ட இடங்கடோறும் பரந்த இருள்நீங்கும்படி,

பீடு கெழு சிறப்பிற் பெருந்தகை அல்லது ஆடவர் குறுகா அருங்கடி வரைப்பின்—பெருமைபொருந்தின தலைமையினையுடைய பாண்டியனல்லது சிறுகுறுந்தொழில்செய்யும் ஆண்மக்களும் அணுகவாராத அரியகாவலையுடைய கட்டுக்களின்,

வரை கண்டன்ன தோன்றல—மலைகளைக் கண்டாற்போன்ற உயர்ச்சியையுடையவாய்,

வரை சேர்பு வில் கிடந்தன்ன கொடிய—மலைகளைச்சேர்ந்து இந்திரவிற்கிடந்தாற்போன்ற பலநிறமாய் வீழ்ந்துகிடந்த கொடிகளையுடையவாய்,

புலிமுதலியவற்றின் வரிகள்தோன்ற உள்ளே மயிர்விரவின.

வியன் கண் கானத்து முல்லைப் போது உறழப் பல் பூ நிரைத்து—அகற்சியை இடத்தேயுடைய காட்டிடத்து முல்லைப்போதுடனே மாறுபடும்படி ஏனைப் பல் பூக்களையும்நிரைத்து,

சாலேகத் தகடு குத்துறுத்து—சாளரங்களாகத்திறந்ததகடுகளை ஆணிகளாலே தைத்து,

மடை மாண் பாண்டில்—மூட்டுவாய் மாட்சிமைப்பட்ட வட்டக்கட்டில்,

கொம்பைச்செத்தி உளியாற்குயின்ற இலையை இடையிட்டுப் பொறித்து நிரைத்துச் சாலேகத்தகடுகளைக் குத்துறுத்து மடைமாண்பாண்டிலெனமுடிக்க.

முத்து உடை நுண் இழை பொலிய நாற்றித் தொடை மாண்டு பேரளவு எய்திய பாண்டில்—முத்தைத் தன்னிடத்தேயுடைய மெல்லியநூல் அழகுபெறும்படி கட்டிலின்கீழேவீழ நாலுபுறமும்நாற்றி அதனைத் தன்னிடத்தேகட்டுதல்மாட்சிமைப்பட்டுப் பெரிய எல்லையைப்பெற்ற பாண்டிலெனக்கூட்டுக.

என்றதனால் தந்தத்தாற்சமைத்த கட்டிலைச்சூழ முத்துவடநாற்றியென்றார்.

புலிப் பொறிக் கொண்ட பூங்கேழ்த் தட்டத்துக் கண் புதையக் கொளீஇத் துகள் தீர்ந்து பெரும்பெயர்ப் பாண்டில்—புலியினதுவரியைத் தன்னிடத்தேகொண்ட பொலிவுபெற்ற நிறத்தையுடைய கச்சாலே நடுவுவெளியான இடமறையும்படி கோக்கப்பட்டுக் குற்றமற்றுக் கச்சுக்கட்டிலென்னும் பெரிய பெயரையுடைய பாண்டிலெனக்கூட்டுக.

தூங்கு இயல் மகளிர் வீங்கு முலை கடுப்பப் புடை திரண்டிருந்த குடத்த அடி—சூன்முற்றி அசைந்த இயல்பினையுடையராகிய மகளிரது பால்கட்டிவீங்கின முலையையொப்பப் பக்கமுருண்டிருந்த குடத்தையுடையவாயஅடி,

இஃது உருட்சிக்கு உவமைகூறிற்று.

இடை திரண்டு உள்ளிமுதல் நோன் அடி பொருத்தி அமைத்து—குடத்திற்குங்கட்டிற்குநடுவாகியஇடம் ஒழுகமெல்லிதாய்த்திரண்டு உள்ளிமுதல்போலும் வலியினையுடையகால்களைத் தன்னிடத்தேதைத்துச்சமைத்துப் பேரளவெய்தியபாண்டிலென்க.

உள்ளிப்புட்டில்போல்வதனை உள்ளிமுதலென்றார்.

[மெல்லிதின் விரிந்த சேக்கை மேம்படத், துணைபுண ரன்னத் தூநிறத் தூவி, யிணை யணை மேம்படப் பாயணை யிட்டு:]

மெல்லிதின் விரிந்த இணைஅணைசேக்கை—மெல்லிதாகவிரிந்த இணைதலணைந்த படுக்கையென்க.

மேம்படத் துணை புணர் அன்னத் தூநிறத் தூவி பாய்—அச்சேக்கைக்குமேலாகத் தம்பேட்டைப்புணர்ந்த அன்னச்சேவலின் தூயநிறத்தையுடைய சூட்டாகிய மயிர் பரக்கப்பட்டு,

"சிறுபூளை செம்பஞ்சு வெண்பஞ்சு சேண, முறுதூவி சேக்கையோ டைந்து:" என்ற ஐந்தினையும்படுத்ததென்பதுதோன்ற இணையணையென்றார். என்புருகி மிக்க அன்போடுபுணர்தலிற் சூட்டிற்கு மென்மைபிறக்குமென்பதுதோன்றத் துணைபுணர்

புள்ளின்றூவியென்றார். பிறரும் இக்கருத்தேபற்றி * "ஆதரம் பெருகுகின்ற வன்பிஞ லன்ன மொத்தும்" என்றார்.

[காடி கொண்ட கழுவுறு கலிங்கத்துத், தோடமை தூமடி விரித்த சேக்கை:] மேம்பட அணையிட்டுக் (௧௩௩) காடி கொண்ட கழுவுறு கலிங்கத்துத் தூ மடிவிரித்த தோடு அமை சேக்கை—அத்தூவிக்குமேலாக அணைகளுமிட்டுவைத்துக் கஞ்சியைத் தன்னிடத்தேகொண்ட கழுவுதலுற்றதுகிலின் தூய மடித்ததுவிரித்த செங்கழுநீர்முதலியவற்றின் இதழ்கள்பொருந்தின படுக்கை,

இணையணைசேக்கை மேம்படத் தூவிபாய் அத்தூவிக்கு மேம்பட அணையிட்டுத் தூமடிவிரித்த சேக்கையென்க.

ஆரம் தாங்கிய அலர் முலை ஆகத்துப் பின் அமை நெடுவீழ் தாழ—முன்பு முத்தாற்செய்த கச்சுச்சுமந்த பருத்தமுலையினையுடைய மார்பிடத்தே இப்பொழுது குத்துதலமைந்த நெடிய தாலிநாணொன்றுமே தூங்க,

வீழ்ந்துகிடத்தலின், வீழென்றார். இனிப் பின்னுதலமைந்த நெடியவீழ் - மயிரென்பாருமுளர்.

துணை துறந்து—அரசன் பிரிகையினாலே,

நல் நுதல் உலறிய சில் மெல் ஓதி — நன்றாகிய நுதலிடத்தே கைசெய்யாமல் உலறிக்கிடந்த சிலவாகிய மெத்தென்ற மயிரினையும்,

இனித் துணைதுறந்துலறியவோதியெனக்கூட்டிக் கூடிக்கிடந்த தன்மைநீங்கி உலறிய ஓதியென்றுரைப்பாருமுளர்.

[நெடுநீர் வார்குழை களைந்தெனக் குறுங்கண், வாயுறை யழுத்திய வறிதுவீழ் காதின்:]

நெடுநீர் வார் குழை களைந்தென வறிது வீழ் காதின்— பெரிய ஒளியொழுகின மகரக்குழையைவாங்கிற்றாகச் சிறிதேதாழ்ந்த காதினையும்,

நீர்மை - ஒளி.

குறுங்கண் வாயுறை அழுத்திய காது—சிறிய இடத்தையுடைய தாளுருவியழுத்தியகாது,

வாயுறவென்றுபாடமாயின், கடுக்கனைவாயுறும்படியழுத்தினகாதென்க.

பொலம் தொடி தின்ற மயிர் வார் முன்கை வலம்புரி வளையொடு கடிகைநூல் யாத்து—முன்பு பொன்னாற்செய்த தொடிகிடந்து தழும்பிருந்த மயிர் ஒழுங்குபட்டுக்கிடந்த முன்கையிலே வலம்புரியையறுத்துப்பண்ணின வளையையிட்டுக் காப்புநாணைக்கட்டி,

ஒடு - வேறுவினையொடு.

வாளைப் பகு வாய் கடுப்ப வணக்குறுத்துச் செவ்விரற் கொளீஇய செங்கேழ் விளக்கத்து—வாளையினது பகுத்தவாயையொக்க முடக்கத்தையுண்டாக்கிச் சிவந்தவிரலிடத்தேயிட்ட சிவந்தநிறத்தையுடைய முடக்கென்னுமோதிரத்தையும்,

---

* சீவகசிந்தாமணி, நாமகளிலம்பகம், ௬௩௦:—"காதலாற் காம பூமிக் கதிரொளி யவரு மொத்தார் - மாதருங் களிற ஞனு மாசுண மகிழ்ச்சி மன்ற - லாதரம் பெருகு கின்ற வன்பிஞ லன்ன மொத்தார் - தீதிலார் திளைப்பி னுமான் செல்வமே பெரிது மொத்தார்."

பூந்துகில் மரீஇய ஏந்து கோட்டு அல்குல் அம் மாசு ஊர்ந்த அவிர் நூற் கலிங்க மொடு—முன்பு பூத்தொழிலையுடைய துகில்கிடந்த உயர்ந்த வளைவினையுடையவல்கு லில் இக்காலத்துடுத்த அழகிய மாசேறிய விளங்குகின்ற நூலாற்செய்த புடைவை யுடனே,

[புனையா வோவியங் கடுப்பப் புனைவில்:]

புனையா ஓவியம் கடுப்ப— வண்ணங்களைக்கொண்டெழுதாத வடிவைக்கோட்டின சித்திரத்தையொப்ப,

புனைவில் நல்லடி (கடுக) யென மேல்வருவதனைக்கூட்டி, கழுவிச் செம்பஞ்சிட் டுப் பூண்களணியாத நன்றாகியவடியென்க.

தளிர் ஏர் மேனி—மாந்தளிரையொத்த நிறத்தினையும்,

தாய சுணங்கின்—பரந்த சுணங்கினையும்,

அம் பணைத் தடைஇய மென்றோள்—அழகினையுடைய மூங்கில்போலத்திரண்ட மெல்லியதோளினையும்,

[முகிழ்முலை, வம்புவிசித் தியாத்த:] வம்பு விசித்து யாத்த முகிழ் முலை—கச்சை வலித்துக்கட்டின தாமரைமுகைபோலும் முலையினையும்,

வாங்கு சாய் நுசுப்பின்—வளையும் நுடங்குமிடையினையும்,

மெல்லியல் மகளிர்—மெத்தென்ற தன்மையினையுமுடைய சேடியர்,

நல் அடி வருட—துயிலுண்டாகுமோவென்று அடியைத் தடவ,

மேனி (கசஅ) முதலியவற்றையுடையமகளிர் (கடுக) புனைவில் (கசஎ) நல்லடி வருடவென்க.

நறை விரவுற்ற நறு மென் கூந்தற் செம்முகச் செவிலியர் கைம் மிகக் குழீஇ—நறைகலத்தலுற்ற நறிய மெல்லியமயிரினையுடைய சிவந்தமுகத்தையுடைய செவிலித் தாயர் இவளாற்றாவொழுக்கமிகுகையினாலே திரண்டு,

குறியவும் நெடியவும் உரை பல பயிற்றி—பொருளொடுபுணராப் பொய்ம்மொழி யும் மெய்ம்மொழியுமாகிய உரைகள்பலவற்றையும் பலகாற்சொல்லி,

* "ஒன்றே மற்றுஞ் செவிலிக் குரித்தே" என்பதிலக்கணம்.

இன்னே வருகுவர் இன் றுணையோர் என முகத்தவை மொழியவும் ஒல்லாள் மிகக் கலுழ்ந்து—இப்பொழுதேவருகுவர் நினக்கினிய துணையாந்தன்மையையுடை யோரென்று அவள்மனத்துக்கு இனியவார்த்தைகளைக்கூறவும் அதற்குப்பொருந்தா ளாய் மிகக்கலங்கி,

[நுண்சேறு வழித்த நோனிலைத் திரள்கால், ஊறா வறுமுலை கொளீஇய:] ஊறா வறுமுலை கொளீஇய நுண் சேறு வழித்த நோன் நிலைத் திரள் கால்—குடங்களைக் கடைந்துதைத்த சாதிலிங்கம்பூசின வலியநிலையினையுடைய மேற்கட்டியிற் றிரண்ட கால்களை,

கால் திருத்தி—கட்டிற்கால்களுக்கு அருகாகநிற்கும்படிபண்ணி அதனிடத்தே கட்டி,

ஊறாவறுமுலை - குடத்திற்கு வெளிப்படை; முலைபோறலின் முலையென்றார்.

[புதுவ தியன்ற மெழுகுசெய் படமிசை:] மெழுகு செய் படமிசைப் புதுவது இயன்ற—மெழுகுவழித்த மேற்கட்டியின்மேலே புதிதாகவெழுதின,

* தொல்காப்பியம், பொருளதிகாரம், செய்யுளியல், கஎசு.

[திண்ணிலை மருப்பி னாடுதலை யாக, விண்ணூர்பு திரிதரும்:]

விண்—ஆகாயத்திடத்தே,

திண் நிலை மருப்பின் ஆடு தலையாக ஊர்பு திரிதரும்—திண்ணியநிலையினையுடைய கொம்பினையுடைய மேடராசிமுதலாக ஏனையிராசிகளிற் சென்றுதிரியும்,

வீங்கு செலல் மண்டிலத்து முரண் மிகு சிறப்பிற் செல்வனொடு நிலைஇய—மிக்க செலவினையுடைய ஞாயிற்றோடே மாறுபாடுமிகுந்த தலைமையினையுடைய திங்களோடு * திரியாமனின்ற,

உரோகிணி நினைவனள் நோக்கி—உரோகிணியைப்போல யாமும் பிரிவின்றியிருத்தலைப் பெற்றிலேமேயென்று நினைத்து அவற்றைப்பார்த்து,

ஞாயிறு சண்டெழுதியதென்று திங்களிற்கு அடைகூறிற்று.

நெடிதுயிரா—நெட்டுயிர்ப்புக்கொண்டு,

[மாயித ழேந்திய மலிந்துவீ ழரிப்பனி, செவ்விரல் கடைக்கண் சேர்த்திச் சில தெறியா:] மா இதழ் வீழ் கண் கடை மலிந்து ஏந்திய அரிப் பனி சில செவ்விரல் சேர்த்தித் தெறியா—நீலப்பூவிரும்பினகண் தன்கடைக்கண்ணிடத்தேவர மிக்குச் சுமந்த ஐதாகிய நீரிற்சிலவற்றைச் சிவந்த விரலைச்சேர்த்தித் தெறித்து,

என்றது - மிகவுமழாமல் மல்கினநீரைத் தெறித்தென்றார்.

புலம்பொடு வதியும் நலம் கிளர் அரிவைக்கு — தனிமையோடுகிடக்கும் அன்புமிகுகின்ற அரிவைக்கு,

அரசன்பிரிகையினாலே நெடுவீழ்தாழ (கசுஎ) நூல்யாத்து (கசஉ) மாசூர்ந்தகலிங்கத்தோடே (கசசு) ஒதியினையும் (கருஅ) காதினையும் (கசம) விளக்கத்தினையு (கசச) முடையளாய் மிகக்கலங்கி (க௫சு) உரோகிணி நினைவனணோக்கி நெடிதுயிர்த்துத் (கசுரு) தெறித்து (கசு௫) மகளிர் நல்லடிவருட (க௫க) ஓவியங்கடுப்ப (கசஎ) வதியுமரிவைக்கு (கசுசு) என வினைமுடிக்க.

அரிவைக்கு இன்னா அரும்படர் தீர — அரிவைக்குத் தீதாயிருக்கின்ற ஆற்றுதற்கரிய நினைவு தீரும்படி,

பாசறைத் தொழில் (கஅஅ) விறல் தந்து இன்னே முடிக தில்— வேந்தன் பாசறையிடத்திருந்து பொருகின்ற போர்த்தொழில் அவனுக்கு வெற்றியைக்கொடுத்து இப்பொழுதே முடிவதாக; இஃது எனக்குவிருப்பம் எனமுடிக்க.

அம்ம— கேட்பாயாக;

இஃது இவள்வருத்தமிகுதி தீரவேண்டிக் கொற்றவையைநோக்கிப் பரவுகின்றவள்கூற்றாயிற்று. கேட்பாயாகவென்றது கொற்றவையைநோக்கி. முடிகவென்ற வியங்கோள் வேண்டுகோடற் பொருண்மைக்கண் வந்தது. தில் - விழைவின்கண் வந்தது.

மின் அவிர் ஓடையொடு பொலிந்த வினை நவில் யானை நீள் திரள் தடக்கை நிலமிசைப் புரளக் களிறு களம்படுத்த பெருஞ்செய் ஆடவர்—ஒளிவிளங்குகின்ற பட்டத்தோடே பொலிவுபெற்ற போர்த்தொழிலைப்பயின்ற யானையினுடைய நீண்ட திரண்ட பெருமையினையுடையகை அற்று நிலத்தேபுரளும்படி யானையை முன்னர்க் கொன்ற பெரியசெயலையுடைய வீரருடைய,

செயலென்னும் வினைப்பெயர் செய்யென முதனிலையாய் நின்றது.

---

* தெரியாமனின்றவென்றும் பிரதிபேதமுண்டு.

ஒளிறு வாள் விழுப் புண் காணிய புறம் போந்து— விளங்கும்வாளினாற் போழ்ந்த சீரியபுண்ணைக் கண்டுபரிகரித்தற்குத் தானிருக்கின்ற இடத்திற்குப் புறம் பேபோந்து திரிதரும்வேந்தன் (௧௮எ) என்க.

வடந்தைத் தண் வளி—வடதிசைக்கண்ணதாகிய குளிர்ந்தகாற்று,

என்றது வாடையை.

[தண்வளி யெறிதொறு நுடங்கித், தெற்கேர் பிறைஞ்சிய தலைய நற்பல், பாண்டில் விளக்கிற் பரூஉச்சுட ரழல:] நல் பல் பாண்டில் விளக்கிற் பரூஉச் சுடர் தண்வளி எறிதொறும் நுடங்கித் தெற்கு ஏர்பு இறைஞ்சிய தலைய அழல—நன்றாகிய பல கால் விளக்கிலெரிகின்ற பருத்தகொழுந்து வாடைக்காற்று அடிக்குந்தோறும் அசைந்து தெற்குநோக்கியெழுந்து சாய்ந்த தலையினையுடையவாயெரிய,

விளக்கு - ஆகுபெயர்.

வேம்பு தலை யாத்த நோன் காழ் எஃகமொடு முன்னோன் முறைமுறை காட்ட— வேப்பந்தாரைத் தலையிலேகட்டின வலிய காம்பினையுடைய வேலோடே முன்செல்கின்ற சேனாபதி புண்பட்டவீரரை அடைவே அடைவேகாட்ட,

பின்னர் மணி புறத்து இட்ட மாத் தாட் பிடியொடு பருமம் களையாப் பாய் பரிக் கலி மா இருஞ்சேற்றுத் தெருவின் எறிதுளி விதிர்ப்ப—பின்னாக மணிகளைத்தன்னிடத்தேயிட்ட பெருமையையுடைய தாளினையுடைய குசையோடே பக்கரைவாங்காத பாய்ந்துசெல்லுஞ் செலவினையுடைய செருக்கினகுதிரைகள் கரிய சேற்றையுடைய தெருவிலே தம்மேலேவீசும் துளிகளையுதற,

தாளென்றது வாய்க்கருவியிற் கோத்துமுடியும் குசையிற்றலையை.

புடை வீழ் அம் துகில் இடவயின் தழீஇ—இடத்தோளினின்றும் நழுவிவீழ்ந்த அழகினையுடைய ஓலியலை இடப்பக்கத்தேயணைத்துக்கொண்டு,

வாள் தோட்கோத்த வன்கட் காளை சுவல் மிசை அமைத்த கையன்— வாளைத் தோளிலேகோத்த தறுகண்மையையுடைய வாளெடுப்பான்றோளிலே வைத்த வலக்கையையுடையனாய்,

முகன் அமர்ந்து— புண்பட்டவீரர்க்கு அகமலர்ச்சிதோன்ற முகம்பொருந்தி,

நூல் கால்யாத்த மாலை வெண்குடை — நூலாலே சட்டத்தைக்கட்டின முத்த மாலையினையுடைய கொற்றக்குடை,

தவ்வென்று அசைஇத் தா துளி மறைப்ப—தவ்வென்னுமோசைபட்டு அசைந்து பரக்கின்ற துளியைக் காக்க,

தாழ்துளியும்பாடம்.

நள்ளென் யாமத்துப் பள்ளிகொள்ளான் சிலரொடு திரிதரும் வேந்தன் — நள்ளென்னுமோசையையுடைய நடுவியாமத்துப் பள்ளிகொள்ளானாய்ச் சிலவீரரோடே புண்பட்டோரைப் பரிகரித்துத் திரிதலைச்செய்யுமரசன்,

பலரொடு முரணிய பாசறைத் தொழில் — சேரன் செம்பியன்முதலிய எழுவரோடே மாறுபட்டுப் பொருகின்ற பாசறையிடத்துப் போர்த்தொழில்,

புண்காணிய புறம்போந்து (௧௭௨) சுடரழலக் (௧௭௬) காட்ட (௧௭௭) விதிர்ப்பத் (௧௮0) தழீஇக் (௧௮௧) கையனாய் அமர்ந்து (௧௮௩) மறைப்பப் (௧௮௫) பள்ளிகொள்ளானாய்த் (௧௮௬) திரியும் வேந்தன் (௧௮எ) என்க.

அம்ம (கசுஅ), வானம் கார்காலத்து மழையைப்பெய்ததாகப் (உ) பின்னர் நிகழ்ந்தபொழுது கூதிர்க்காலமாய் நிலைபெற்றது (எஉ); அக்கூதிர்க்காலத்து நடுவியாமத்தே (கஉ) வாயிலினையும் (அஅ) முன்கடையினையும் (கூஉ) முற்றத்தினையும் (கூ0) சிறப்பினையு (அகூ) முடைய கோயில் (க00) வரைப்புக்களிற் (க0எ) காண்பினல்விலிற் (ககச) பாண்டிலிற் (கஉரு) சேக்கையிலே (கருரு) வதியுமரிவைக்குப் (கசுசு) படர்தீரும்படி (கசுஎ) வேந்தன் (கஅஎ) பலரொடுமுரணிய பாசறைத்தொழில் (கஅஅ) விறந்து (கசுஎ) இன்னேமுடிவதாக; இஃது எனக்கு விருப்பம் (கசுஅ) எனக் கொற்றவையைப்பரவிற்றாக வினைமுடிக்க.

இப்பாட்டுத் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் மண்ணசையாற்சென்று பொருதலின், இப்போர் வஞ்சியாகலின், வஞ்சிக்குக்கொற்றவைநிலையுண்மையின், கொற்றவையை வெற்றிப்பொருட்டுப் பரவுதல் கூறினர்; அது பாலைத்திணைக்கேற்றலின்.

**பாண்டியன் நெடுஞ்செழியனை மதுரைக்கணக்காயனார்மகனார் நக்கீரனார்பாடிய நெடுநல்வாடைக்கு மதுரை ஆசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியர் செய்த உரை முற்றிற்று.**

வெண்பா.

வாடை நலிய வடிக்கண்ணா டோணசைஇ
யோடை மழகளிற்றா னுள்ளான்கொல்—கோடன்
முகையோ டலமர முற்றெரிபோற் பொங்கிப்
பகையோடு பாசறையு ளான்.